No. of Printed Pages : 8

**4811**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்
# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை: (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38 -க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5x1=5**

1. ‘கடலை’ - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் __________.

(அ) ஔகாரக்குறுக்கம் (ஆ) ஐகாரக் குறுக்கம்

(இ) மகரக் குறுக்கம் (ஈ) ஆய்தக் குறுக்கம்

2. இரட்டித்து நின்று இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும் சொல் __________.

(அ) குறிப்புப் பெயரெச்சம் (ஆ) பண்புப் பெயர்

(இ) அடுக்குத் தொடர் (ஈ) இரட்டைக் கிளவி

[ திருப்புக

3. "ஆடுவாயா?" என்று வினவிய போது "பாடுவேன்" என்று விடை கூறுவது ________ .

(அ) எதிர்மறை விடை (ஆ) இனமொழி விடை

(இ) வினா எதிர் வினாதல் விடை (ஈ) உறுவது கூறல் விடை

4. நிரைகவர்தல் என்பது ________ .

(அ) வெட்சி (ஆ) நொச்சி (இ) கரந்தை (ஈ) வாகை

5. ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது ________ .

(அ) இன்னிசை வெண்பா (ஆ) இன்னிசைச் சிந்தியல் வெண்பா

(இ) பஃறொடை வெண்பா (ஈ) இணைக்குறள் ஆசிரியப்பா

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ________ .

7. 'வேய்புரை தோள்' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ________ .

8. வருணன் ________ நிலத்திற்குரிய தெய்வம்.

9. மேற்கு + நாடு என்பது ________ எனப் புணரும்.

10. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ________ .

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க.** **10x1=10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. குழலி திருக்குறள் கற்றாள். (பிறவினைத் தொடராக மாற்று)

13. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
அவன் கவிஞன் அன்று

14. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
நான் மழையில் நனைவது பிடிக்கும்.

15. கீழ்க்காணும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைக்க.
மலரும் மணமும் போல

16. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
இராமன் நாளை வருகிறேன் என்றான்

17. பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலரசி

18. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
திரைபடம் எடுக்க பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

19. மரபுப் பிழை நீக்கி எழுதுக.
நரி கத்த யானையும் கத்தியது.

20. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. – நாற்படை

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு விடையளிக்க.** 5x2=10

21. பொதுமொழி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

22. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக் காட்டுடன் விளக்குக.

23. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

24. கருங்குழி - புணர்ச்சி விதி கூறுக.

25. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

26. வாகைத்திணை என்பது யாது?

27. பகுபத உறுப்பிலக்கணம் தருக : கேட்ட

[ திருப்புக

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 இல் வினா எண் 35 இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்க.** 2x5=10

28. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?

29. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள் - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

அல்லது

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க் காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு".

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** 2x5=10

31. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

32. 'மெல்ல மெல்ல மற' என்னும் சிறுகதையின் மையக் கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.

33. தமிழகத்தில் நூலகத்துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

### பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

மம்மி, வர்ற சாட்டர்டே எனக்கு பர்த்டே. நீங்க இன்னும் எனக்கு டிரஸ் எடுக்கவில்லையே, ஏன்? நம்ம ரிலேட்டிவ்ஸ் எல்லாரையும் இன்வைட் பண்ணலாமா?

(ஆ) தொடர்களில் உள்ள கோடிட்ட இடத்தை உரிய தமிழெண்களால் நிரப்புக.

(அ) உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை ________ (45).

(ஆ) உன் இல்லத்தின் எண் ________ (67).

(இ) ஒட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்டுள்ள வயது ________ .

(ஈ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண் ________.

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Food is essential for all living beings. Without food, man cannot live long. Everyone has to eat a certain quantity of food. If he eats less than that quantity, his health will spoil and he will fall ill. So, everyone has to eat enough food to live.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Birds of the same feather flock togehter.

(2) All that glitters is not gold.

(3) Do well what you have to do

(4) Health is Wealth

35. **குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.** 5x1=5

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்தவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள் தாம். மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், ஹெலன்கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத் திறனாளியரே.

தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். வெற்றியும் கண்டார்கள். நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலினால் இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ரூடால்ப் என்னும் பெண்மணி தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் கைவிடாமல் இடைவிடாத பயிற்சி கொண்டார். தனது பதின்மூன்றாவது வயதில் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டார். 1960 -ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற்ற வில்மா, ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப் பெற்றார்.

நம்பிக்கை தான் வாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம்.

(1) சாதனை செய்பவர்கள் யார்?

(2) நம்பிக்கை யாரிடம் அதிகமாக உள்ளது?

(3) சாதனை செய்த மாற்றுத்திறனாளிகளின் பெயர்கள் நான்கினைக் கூறுக.

(4) வில்மா கலந்து கொண்ட ஒலிம்பிக்போட்டி எந்த ஆண்டு நடைபெற்றது?

(5) வாழ்வின் உயிர் நாடி எது?

## பகுதி - 4

36. **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்க.** **1x5=5**

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கி இருந்தது, பறவைகள் ஒலி எழுப்பியவாறே தங்கள் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலை வேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது அப்போது....

அல்லது

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

கடல் *அல்லது* முயற்சி

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் **ஏதேனும் ஐந்தினை** எடுத்து எழுதுக. **1x5=5**

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்த சிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவ நினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே

-இராமலிங்க அடிகள்

## பகுதி - 6

38. மாலா என்பவர் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.10,000/- எடுப்பதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை மாலாவாக பாவித்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க. **1x5=5**

பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5

இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் எல்லாரும் "அவளுக்குகென்ன கவலை? அவள் அம்மா ஓர் ஆசிரியர். அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்து விடுவார். எனவே அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை" என்று கூறுவர் அதனைக் கேட்கும்போது இலக்கியாவிற்கு அம்மாவை நினைத்தால் பெருமையாக இருக்கும்.

பள்ளியில் ஆண்டுத் தேர்வுக்குப் படிப்பதற்காக ஒரு வாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம் போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்து விட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணியாற்றும் ஆசிரியர் கூறினார்.

அம்மாவுக்கு ஏற்பட்ட நிலையைக் கேட்டு இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

(1) இலக்கியாவின் முன்னேற்றத்திற்கு யார் காரணம்?

(2) இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள்?

(3) அம்மாவுக்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள், ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள் அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள், திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

(1) இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?

(2) கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

[ திருப்புக

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடைளிக்க.** 1x10=10

(அ) நும் ஊரில் சாலை வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

அல்லது

(ஆ) உன் பள்ளி இலக்கிய மன்ற விழாவிற்கு வருகை தந்துள்ள புலவர் தமிழன்பன் அவர்களை வரவேற்று ஒரு வரவேற்பு மடல் எழுதுக.

### பகுதி - 2

41. **கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஒன்றினுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** 1x10=10

(அ) நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை - நீர்ப்பற்றாக்குறை - ஏற்படக் காரணம். நீரைச் சேமிக்கும் வழிகள் - மழைநீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமித்தல் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழைபெறுவோம்.

அல்லது

(ஆ) பெண்கல்வி - பெண்ணுரிமை - சமுதாயத்தில் பெண்கள் நிலை - பெண்களுக்குச் சொத்துரிமை - பெண்விடுதலை - மணக் கொடை - பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்.